**தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்**

**செய்தி வெளியீட்டு எண்**: 88/2024 **நாள்**: 30.07.2024

**செய்திக்குறிப்பு**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண் 09/2024, நாள் 26.07.2024 இல் ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வு (நேர்முக தேர்வு அல்லாத பதவிகள்) அறிவிக்கை வெளியிடப்பட்டது. அவற்றுள் மற்ற பதவிகளுக்கான காலிப் பணியிடங்களுடன் அருங்காட்சியகத் துறையின் உதவி காப்பாட்சியர் (தொல்லியல்) மற்றும் உதவி காப்பாட்சியர் (அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை) பதவிகளுக்கான காலிப் பணியிடங்களும் அறிவிக்கப்பட்டது. மேற்காணும் பதவிகளுக்கான கல்வித் தகுதி அரசு அருங்காட்சியகங்களுக்கான தமிழ்நாடு பொது சார்நிலை பணி விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு அறிவிக்கப்பட்டது. தற்போது அருங்காட்சியகத் துறையினால், உதவி காப்பாட்சியர் (தொல்லியல்) மற்றும் உதவி காப்பாட்சியர் (அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை) பதவிகளுக்கான காலிப் பணியிடங்கள் திரும்பப் பெறப்பட்டதால், இவ்வறிவிக்கையிலிருந்து மேற்கண்ட இரண்டு பதவிகளும் நீக்கப்படுகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

செயலாளர்